भारत का राजपत्र
# The Gazette of India
# இந்திய அரசிதழ்
असाधारण
**EXTRAORDINARY**
சிறப்பிதழ்
भाग XV अनुभाग 1
**Part XV Section 1**
பகுதி XV பிரிவு 1
प्राधिकार प्रकाशित
**PUBLISHED BY AUTHORITY**
அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, गुरूवार, 9, जून 1994/1916 शाका
New Delhi, Thursday, 9th June, 1994/1916 Saga
புது தில்லி, 1994, ஜூன் 9, வியாழக்கிழமை/1916 சக

**Ministry of Law, Justice and Company Affairs**
(Legislative Department)

New Delhi

**சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்**
*(சட்டமியற்றுத் துறை)*

புது தில்லி

The translation in Tamil of the Judges (Protection) Act, 1985 (59 of 1985), The Indian Partnership Act, 1932 (9 of 1932), The Government Savings Bank Act, 1873 (5 of 1873), The Sale of Goods Act, 1930 (3 of 1930), The Public Provident Fund Act, 1968 (23 of 1968) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

நீதிபதிகள் (காப்பளிப்புச்) சட்டம், 1985 (59/1985), இந்தியக் கூட்டாண்மைச் சட்டம், 1932 (9/1932), அரசாங்கச் சேமிப்பு வங்கிகள் சட்டம், 1873 (5/1873), சரக்குகள் விற்பனைச் சட்டம், 1930 (3/1930), பொதுமக்கள் வருங்கால வைப்பு நிதியச் சட்டம், 1968 (23/1968) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[ Price Rs. 30-00

# இந்தியக் கூட்டாண்மைச் சட்டம், 1932

(சட்ட எண் 9/1932)

[1932, ஏப்ரல் 8]

கூட்டாண்மை தொடர்பான சட்டத்தை வரையறை செய்வதற்கும் திருத்தம் செய்வதற்குமான சட்டம்.

கூட்டாண்மை தொடர்பான சட்டத்தை வரையறை செய்வதும், திருத்தம் செய்வதும் உகந்தது என்பதால், ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது :—

## அத்தியாயம் I

### முன்னுரை

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், இந்தியக் கூட்டாண்மைச் சட்டம், 1932 என வழங்கப்பெறும்.

(2) இது ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக, இந்தியா முழுவதும் அளாவி நிற்கும்.

(3) இது, பிரிவு 69 நீங்கலாக, 1932ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாளன்று செல்லாற்றல் பெறும் ; பிரிவு 69 ஆனது, 1933ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாளன்று செல்லாற்றல் பெறும்.

பொருள்வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில் பொருள் குறித்து அல்லது தறுவாய் குறித்து முரணாக எதுவும் இருந்தாலன்றி—

(அ) ஒரு ‘‘ நிறுவத்தின் செயல் ’’ என்பது, அந்த நிறுவத்தால் அல்லது அந்த நிறுவத்திற்கு எதிராகச் செல்லுறுத்தத்தக்க ஓர் உரிமையை விளைவிப்பதாய் உள்ள, அந்த நிறுவத்தின் கூட்டாளி அல்லது முகவர் ஒருவரின் செயல் அல்லது செய்யாது விடுகை எதுவும் என்று பொருள்படும் ;

(ஆ) ‘‘ தொழில் ’’ என்பது, வணிகத்தொழில், வாழ்தொழில் மற்றும் விழைதொழில் ஒவ்வொன்றையும் உள்ளடக்கும் ;

(இ) ‘‘ வகுத்துரைக்கப்பட்ட ’’ என்பது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும் ;

(ஈ) ஒரு நிறுவம் அல்லது அதன் கூட்டாளி ஒருவரைப் பொறுத்த-வரை ‘‘ மூன்றாம் தரப்பினர் ’’ என்பது, அந்த நிறுவத்தில் ஒரு கூட்டாளியாக இல்லாத ஒருவர் என்று பொருள்படும் ; மற்றும்

(உ) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டு, ஆனால், பொருள் வரையறை செய்யப்படாத சொற்றொடர்கள் இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872இல் பொருள்வரையறை செய்யப் 9/1872
பட்டுள்ளபடி அச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள்களைக் கொண்டவையாக இருக்கும்.

9/1872ம் சட்டத்தின் வகையங்கள் பொருந்துறுதல்.

3. இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872இல் நீக்கறவு செய்யப்படாத வகையங்கள், அவை இந்தச் சட்டத்தின் தெரிநிலையான வகையங்களுக்கு முரணாக இல்லாதிருக்கும் அளவுக்கு, நிறுவங்களுக்குத் தொடர்ந்து பொருந்துறும்.